Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 16 [29-05-93] சனிக்கிழமை ஓசை 100

நல்லூர் கிளை நூலகம் மாநகர ... மன்றம் யாழ்ப்பாணம்

## யாழ். மாவட்டத்தில் 3 மாதத்தில் 84 சிசுக்கள் மரணம்

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு முதல் காலாண்டுப் பகுதியில் சிசு மரணங்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவருகிறது. தாய்மாருக்கு போதிய போசாக்கு உணவு கிடைக்காமையே இவ்வாறான அதிகரிப்பிற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இவ் ஆண்டின் முதல் காலாண்டுப்பகுதியில் 84 சிசுக்கள் பிறந்தவுடன் இறந்துவிட்டதாகவும், 3 தாய்மார் பிரசவத்தின் போது இறந்ததாகவும் தெரியவருகிறது. இதேவேளை குருதி அழுகல் நோயினால் மூன்று சிறுவர்கள் இக் காலப் பகுதியில் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

# குருநாகலில் மாதிரி மாகாணசபை எதிர்க்கட்சிகள் அமைப்பதற்கு முடிவு

## முதல்வராக பிரேமச்சந்திரா

(கொழும்பு)

குருநாகலில் சட்டபூர்வமற்ற மாதிரி மாகாணசபையொன்றை அமைக்க எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இம்மாகாண சபை நாளை மறுதினம் குருநாகலில் நடைபெறவிருக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தின் போது மக்கள் முன்னிலையில் அமைக்கப்படவுள்ளது. இதன் முதல்வராக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட யுக்திய ஆசிரியர் சுகந்த தேசப்பிரிய சட்டபூர்வமான மாகாணசபை அமைக்க மக்கள் ஆணையளித்தும் ஆளுநர்கள் தென், வடமேல் மாகாணசபைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர்களை நியமித்ததை ஆட்சேபித்து எதிர்க்கட்சியினர் இம்மாதிரி மாகாணசபையை அமைக்க தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறிமானி அத்துலத்முதலி ஆகியோர் உட்பட எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் மாகாண சபை முதலமைச்சராக ஜி. எம். பிரேமச்சந்திரா பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் நியமனமும் பதவிப் பிரமாணமும் இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகலில் வடமேல் மாகாணசபை அமைக்கப்படுவதைத் தொடர்ந்து தென் மாகாணத்தில் ஒழுங்குசெய்யப்படும் கூட்டத்தில் அப்பகுதி மாகாணசபை அமைக்கப்படும் என அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கையின் பின்னர் வெளிநாட்டு உள்நாட்டு உதவிவழங்கும் நிறுவனங்களிடம் உதவிகளைத் தம்மிடம் வழங்குமாறு மாகாண சபையின் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் யுக்திய ஆசிரியர் தெரிவித்தார்.

## படுகொலை செய்யப்பட்ட செல்வக்குமார்



மந்துவிலில் புதன் நள்ளிரவு படுகொலைசெய்யப்பட்ட செல்வக்குமாரை படத்தில் காணலாம். மந்துவில் மேற்கைச் சேர்ந்த சதாசிவம் செல்வக்குமாரின் சடலம் மலசல கூடத்தில் இருந்து மீட்கப்பட்டது. இரவில் மலசல கூடத்திற்கு இவர் சென்றபோது, இருட்டில் மறைந்திருந்த கொலையாளி இவரைக் கத்தியால் வெட்டி கொன்றுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. கொல்லப்பட்டவரின் கழுத்திலும், கையிலும் பலமான வெட்டுக்காயங்கள் உள்ளன. (86)

படம்: பொ. இராசேஸ்வரன்

## கால எல்லை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனநாயகத்தை காப்பாற்ற மேல்மாகாணசபை பாடுபடும் —சந்திரிகா

[கொழும்பு]

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் ஒரு பலம் பொருந்திய தளமாக மேல் மாகாணசபை திகழும் என மேல் மாகாண் சபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அளித்த செய்தி ஒன்றில் இவ்வாறு கூறிய அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், வடமேல் மாகாணசபை, தென்மாகாண சபை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முறையற்ற நிகழ்வை நாம் என்றும் மறக்க முடியாது. இந்த நிலையை நாம் அங்கீகரிக்க முடியாதுஎன்றார்.

## வவுனியா ஈச்சங்குளத்தில்

## செவ்வாய் விடுமுறை

## சிங்கள கட்சிகளுக்கு

# புக்காரா விமானத் தாக்கு

## ஆறு குண்டுகள் வீசப்பட்டன

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் காட்டுப்பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான 2 புக்காரா விமானங்கள் பலத்த குண்டு வீச்சுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 4-30 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் ஆறு குண்டுகள் வீசப்பட்டன.

இக்குண்டுவீச்சு தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

## மட்டக்களப்பு மீனவருக்கு கனடா நிறுவனம் உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 80 லட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை கனடா உலக பல்கலைக் கழக சேவை நிறுவனம் நிவாரணமாக வழங்கியுள்ளது.

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் மட்டககளப்பு மீனவர்கள் தமது தொழில்களையும் சொத்துக்களையும் இழந்து வருமானத்தையும் இழந்துள்ளமை தெரிந்ததே.

இம் மீனவர்களுக்கே மேற்படி நிறுவனம் ஒவ்வொன்றும் சுமார் 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாபெறுமதியான 60தோணிகளையும் வலைகளையும் வழங்கியுள்ளதாக இந்த நிறுவனத்தின் மாவட்ட அதிகாரி எஸ். மாமாங்கராசா தெரிவித்துள்ளார்.

## வாதுவ கப்பலில் தபால் பொதிகள் வராது

[யாழ்ப்பாணம்]

இன்றுபருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படும் 'வாதுவ' என்ற கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

அதேவேளைஅடுத்த மாதம் நடுப்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படும் 'குமண' என்ற கப்பலில் சுமார் 300 தபால் பொதிகள் மட்டுமே எடுத்துவரப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல்கள்தெரிவிக்கின்றன.

அடுத்தமாதம் முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்தடை

[4 ஆம் பக்கம் பார்க்க)

## சர். செஞ்சிலுவை அதிகாரி இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் இராணுவ நடவடிக்கை காரணமாக காணாமல் போனவர்கள் குறித்து தகவல் பெறுவதற்கும் விடுதலை செய்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்படவுள்ளது.

இந்த முயற்சியில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு ஈடுபடவுள்ளது. இதன் ஒரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## எறிகணைத் தாக்குதல்

நேற்றுமுன்தினம் பிற்பகல் தெல்லிப்பழை, இராணுவ நிலைகளிலிருந்து, மக்கள் இடம் பெயர்ந்திருந்த குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் சேதமெதுவும் ஏற்படவில்லையென தெரியவருகிறது.

இதேவேளை, இரவு 8. 00 மணியளவில் மாதகல், இளவாலை கடற்பரப்புகளிலிருந்து கடற்படையினர் எறிகணைத் தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். (09)

## விடுமுறை

யாழ் மாவட்ட பாடசாலைகள் திணைக்கள நாட்காட்டியில் ஏற்கனவே அறிவித்ததற்கமைய அடுத்த மாதம் முதலாம் திகதிசெவ்வாய்க்கிழமை விடுமுறையாக இருக்குமென யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் ஏற்பாடு ஏற்கனவே ஒழுங்கு செய்த நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் யாழ். கல்வித் திணைக்களமும், பாடசாலைகளும் அடுத்த மாதம் இரண்டாம் திகதி புதன் கிழமை வழமைபோல் இயங்குமென யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

## விடுமுறை மாற்றம்

(கொழும்பு)

ஹஜ்ஜுப் பெருநாளுக்காக அடுத்த மாதம் முதலாம்திகதி பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அரசாங்க வங்கிவிடுமுறைக்குப் பதிலாக இரண்டாம் திகதி புதன்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# விழிப்புணர்வு போதவில்லை

## பௌத்த பீடங்களின் ஒன்றியம் கருத்து

(கொழும்பு)

'சிங்கள கட்சிகளின் விழிப்புணர்வு இன்மையாலேயே பல பெறுமதிமிக்க தலைவர்களின் உயிர்களை நாடு இழந்துள்ளது. இது எமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள படுபாதகமான நிலையாகும். இந்த நிலை எமது நாட்டின் ஜனாதிபதி ஒருவருக்கோ, ஒரு மதத்திற்கோ, அரசியற்கட்சிக்கோ ஏற்பட்டதல்ல. முழுநாட்டிற்குமே பாதகமான விடயம்'' என பௌத்த பீடங்களின் ஒன்றியம் 'சிஹுமின' பத்திரிகை மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்; வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள தீவிரவாதமே இன்று நாடு எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினையாகும். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளுக்கும் பின்னணி இதுவே.

இப்பிரச்சினை நீடிக்குமானால் தனி மனிதனின் சுதந்திரம், நடமாட்டம்கூட பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிடும். இன்று எல்லைகளில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுபோல் நாடு முழுவதும் உள்ள மக்கள் பாதிக்கப்படும் நிலைஏற்படும்.

அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து தீவிரவாதத்தை ஒழிக்க முன்வர வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் தமது கட்சிக்கு அழுத்தம் கொடுத்து தலைவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

தீவிரவாதப் பிரச்சினை வளர்ந்துகொண்டு இருக்கும்வரை நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. இப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னரே மக்கள் சுதந்திரமாக வாழமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்து இரண்டரை மணி நேரத்தில்

## குண்டு வெடித்த இடத்தில் தடயம் கிடைக்கவில்லை

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ குண்டு வெடிப்பில் பலியான இடத்திற்கு சம்பவம் நடைபெற்று இரண்டரை மணிநேரத்தில் நான் சென்றபோது அங்கு அவர் கொல்லப்பட்டதற்கான தடயங்கள் எதுவும் காணப்படவில்லை என சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் பி. ஜே. எஸ். றொட்றிக்கோ தெரிவித்தார்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கொப்பேகடுவ உட்பட பத்து சிறிலங்கா பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள் அராலித்துறைப் பகுதியில் கண்ணிவெடித் தாக்குதலில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பிள்ளையைபிணை வைத்து வெளிநாடு பயணம்

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காகச் செல்லும் பெண்களுக்குக் கடன் அடிப்படையில் வட்டிக்குப் பணம் வழங்கி அதற்குப் பதிலாக அவ்வாறு செல்லும் பெண்களின் பிள்ளைகள் பிணையாக வைக்கப்பட்டிருந்ததாக குருநாகல் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஆடம்பர வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட 17 பிள்ளைகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கோடீஸ்வரர் தனக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையப் பகுதியிலிருந்து கண்டெடுத்த பணத்திலிருந்தே கோடீஸ்வரரானதாகப் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்லும் மகளிரின் பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையமாக 1988-ம் ஆண்டு எதுல் கோட்டே பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம் பின்னர்குருநாகல்பகுதிக்கு இடமாற்றப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜேர்மனிக்கு வரும்

## அகதிகளைத் தடுக்கும் சட்டம் அங்கீகாரம்

ஜேர்மனிக்கு அகதிகளாக வருவோரைத் தடைசெய்யும் பொருட்டு ஜேர்மன்அரசு தயாரித்த சட்டமசோதாவிற்கு ஜேர்மன் நாடாளுமன்றத்தின் மேற்சபை ஏகமனதாக நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனால் இதுவரை அகதிகளை தடை எதுவுமின்றி அனுமதித்து வந்த ஜேர்மன் அகதிகளுக்கான சட்டம் மாற்றியமைக்கப்படுகின்றது.

இச்சட்டமசோதாவிற்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் ஜேர்மன் நாடாளுமன்றத்தின் கீழ்சபை வாக்களித்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் உள்நாட்டுப்போர் நடக்கும் நாடுகளில் இருந்தும் சர்வாதிகாரிகளால் ஆளப்படும் நாடுகளில் இருந்தும் தகுந்த ஆதாரங்களுடன் வரும் அகதிகளை மட்டும் ஜேர்மனி ஏற்றுக்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா றோட், யாழ்ப்பாணம். [4923]

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள் றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6633)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி. சாவகச்சேரி (சி-6584)

### வேப்பெண்ணை

வேப்பெண்ணைக் கிருமிநாசினி உங்கள் தோட்டப் பயிர்களையும் எலுமிச்சை, தோடை இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்த வல்லது. இது மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன் பெறுங்கள் எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34 ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4938)

### வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி புழுக்களை அழித்து — மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள் எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி 34 ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4939)

### விற்பனைக்கு

---

### சேர் பொன் இராமநாதன் காலத்து பழமை வாய்ந்த தளபாடங்கள் திருத்தி அமைத்தல்

எமது பல்கலைக் கழக நூலகத்தில் உள்ள பழமை வாய்ந்த தளபாடங்களை அதே பொலிவுடன் மீளத் திருத்தி அமைத்துத் தருவதற்கு அனுபவம் உள்ள சிற்பாச்சாரிகளிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் 10.06 93 காலை 10மணிக்கு முன்னதாக "நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பழமை வாய்ந்த தளபாடங்கள் திருத்தி அமைத்தல்" என்று எழுதப்படல் வேண்டும். இதற்கு விண்ணப்பப்படிவங்கள் எவையும் எம்மால் வழங்கப்படமாட்டாது. தளபாடங்களை அலுவலக நேரத்தில் நூலகத்தில பார்வையிடலாம்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி/6698)

---

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

1993ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு

### புகைப்படம் எடுத்தல்

11-09-1993இல் நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் (கலர்) எடுப்பதற்கு படப் பிடிப்பாளரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. படம் எடுப்பதற்கு விண்ணப்பிக்க விருப்பம் உடையவர்கள் தாங்கள் எடுத்துள்ள படங்களின் மாதிரிப் பிரதியுடன் தமது தகுதியைக் காட்டும் நற்சான்றுகளுடனும் 23-6 1993ஆம் திகதி மு. ப. 10 00 மணிக்கு எனது அலுவலகத்தில் சந்திக்கவும்

போஸ்ற்காட் பருமனுள்ள படப்பிரதி ஒன்றிற்கு உரிய விலைக்கூற்றை பொறியிடப்பட்ட கடித உறையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

-பதிவாளர்
யாழ் பல்கலைக்கழகம்
1993-05-27
(சி-6702)

---

## அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம் மாதாந்த இசை நிகழ்ச்சி

ஈழநாதம் மக்கள் தினசரியின் ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி நல்லூர்
காலம்: **30-05-1993** ஞாயிறு மாலை 5மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5 00—5 45 வயலின் இசை
செல்வி சிவகலா சிவஞானம் -வயலின்
செல்வன் எஸ். துரைராசா -மிருதங்கம்

5 45—6 45 இசைக்கச்சேரி
செல்வி கனகாம்பரி பத்மநாதன் -பாட்டு
திரு வி. ஆர். இராதாகிருஷ்ணன்-வயலின்
திரு கே. கண்ணதாசன் -மிருதங்கம்
திரு. ப இரதிரூபன் -கடம்

6 45—7 15 மங்கள விளக்கேற்றல்
1. க. நந்தகுமாரன் உரிமையாளர் கலைமகள் வர்த்தக நிலையம்

---

பொலிஸ் விடுதியில் இருந்து

## தொலைந்த துப்பாக்கி காட்டிலிருந்து மீட்பு

நுவரெலியா பொலிஸ் நிலைய விடுதியில் காணாமல் போன ரி-56 ரக துப்பாக்கி ஒன்று காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டதுடன் மற்றொரு பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; நோர்வூட் பொலிஸ் நிலைய விடுதியில் தங்கியிருக்கும் கான்ஸ்டபிள் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கி கடந்த 12 ஆம் திகதியில் இருந்து காணாமல் போய்விட்டது இதுபற்றி அறிவித்தால் தமது கவலையீனத்துக்குத் தண்டனை கிடைக்கும் என்று அஞ்சி பிரஸ்தாப கான்ஸ்டபிள் பேசாமல் இருந்துவிட்டார்.

எனினும் சில நாட்களில் இது அம்பலமாகியது. அதே மாவட்டத்தைச்சேர்ந்த அக்கரபத்தனை பொலிஸ் நிலைய றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள் விசேட கடமைக்காக நோர்வூட் வந்திருந்ததால் 12ஆம் திகதி அவர் ஒதே விடுதியில் தங்கியிருந்துள்ளார்.

இவர்மீது சந்தேகம் கொண்ட பொலிசார் அக்கரபத்தனை பொலிஸ் நிலையம் சென்று அங்கு சோதனையிட்டதுடன் இவரை விசாரணைக்குட்படுத்திய போது பிளாக்பூல் தோட்ட காட்டுப் பகுதியில் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன் பிரஸ்தாப பொலிசாரும் கைது செய்யப்பட்டார்.

---

## உங்கள் கவனத்திற்கு

கிளாலிப் படகுசேவை நடந்த 25 5 93 அதிகாலை கொழும்பிலிருந்து கொண்டு வந்த எனது இளம்பிறவுண் கலர் பிரயாணப்பையை ஒரு பெண்மணி அபகரித்துக் கொண்டு போய் விட்டார். இப்பெண்மணி உயரமான கறுப்புநிறம், பருத்தஉடல், இளம் றோசாக்கலர் சேலை அணிந்தவர். 40 வயதுக்கு மேற்பட்டவர் தலையில் உரப்பையுடன் 17 வயது மெலிந்த உடல்கொண்ட மகனுடன் காணப்பட்டவர் எனது பிரயாணப் பையில் சாறிகள், உடுபுடைவைகள், காற்சங்கிலி, எனது மகனின் பட்டமளிப்புப் படங்கள் உண்டு. மேற்படி பெண்மணி பற்றியோ, சாமான்களை வைத்திருப்பவர்கள் பற்றியோ தகவல் தருவோருக்குச் சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- திருமதி லோகநாதபிள்ளை 136, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

(4988)

---

## 7ஆவது பிறந்ததினம்

## செல்வி சங்கரி - 29-05-93

பருத்தித்துறை பூதராயர் வீதியில் வசிக்கும் செந்திவேல் சிவராசசுந்தரி தம்பதிகளின் புதல்வி சங்கரி 7ஆவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்.

சங்கரி, பருத்தித்துறை சிவனருளால் நீடூழி வாழ அப்பா, அம்மா அக்காமார். பெரியண்ணா (கொழும்பு) சின்னண்ணா, சேகர் அண்ணாவுடன், உற்றார், உறவினர் யாவரும் வாழ்த்துகின்றார்கள்.

(சி-6696)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை தலைமையலுவலகம்

## சண்டிலிப்பாய்ப் பிரிவு

23-05-93 ல் இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில் பரிசு பெற்ற சீட்டுக்கள் விபரம் :

01-ம் பரிசு 2163
02-ம் பரிசு 2335
03-ம் பரிசு 4222
04-ம் பரிசு 3460
05-ம் பரிசு 4819

பரிசுக்குரியவர்கள் உடனடியாக சண்டிலிப்பாய்ப் பிரிவுப் பணிமனையில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துப் பரிசைப் பெற்றுக் கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
27-07-93,

(சி/6700)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-05-29

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-
★ குட்டி (சோமன் யோகலிங்கம் - அக்கரைப்பற்று - அம்பாறை)

யாழ் - அரியாலைப் பகுதியில் எமது காவலரண் ஒன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-
குபேரன்/குமார் (இராசரத்தினம் உதயகுமார் - கடாபி வீதி, அரியாலை - யாழ்.)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 4-வது நாளாக மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது திக்கம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-
பாபு (நாகராசா சிதம்பரநடராசன் - அல்வாய் வடமேற்கு, பருத்தித்துறை - யாழ்.)

1988ஆம் ஆண்டு யாழ் - உடுப்பிட்டியில் இந்தியப் படையினருடனான சமரின் போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-
கப்டன் சீலன் (முருகன் ஜெயச்சந்திரன் (ஜெகன்) உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு, யாழ்.)

1989ஆம் ஆண்டு மட்டு - பெண்டுகள் சேனையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா கல்மடுப்பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-
பல்லவன் (மகாதேவன் இராசலிங்கம் - பெருவெளி, மூதூர் - திருமலை)

முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த-
உதயன் (சுப்பிரமணியம் தவராஜா — ஜெயந்திநகர், கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு மட்டு - வாகனேரிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
2-ம் லெப். ராமன்/டினோ (கணபதிப்பிள்ளை சிவயோகநாதன் - காரைதீவு - அம்பாறை)
2-ம் லெப். சாந்தன் (இரத்தினசிங்கம் ஐங்கரன்- விநாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை)
ஜெயசுதானந்தன்/ஜெயசுதன் (பாலசிங்கம் ரவீந்திரன் - மத்தியமுகாம் - அம்பாறை)

## விற்பனைக்கு

பலசரக்கு கடைகளுக்கேற்ற பாவித்த தளபாடங்கள் (அலுமாரிகள், சோக்கேஸ் றாக்கைகள், பட்டடைகள் மேசை) விற்பனைக்குஉண்டு தொடர்பு செ. கோபாலகிருஷ்ணன். இரும்புத் தொழிற்சாலை, சங்கானை. (4954)



## விற்பனைக்கு

நிச்சி புதிய சிங்கர் தையல் மெசினும் ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: R மருதலிங்கம் 8/1, அம்மன்வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4991)


கலைமகள் வர்த்தக நிலையம்
2 இ. தேவராஜா வர்த்தகர் சோபனா ஆடை அகம்.

தலைமையுரை: திரு. கே ஜெயரத்தினம் அவர்கள் (அதிபர் தொழில்நுட்பக்கல்லூரி கொக்குவில்)

பிரதமவிருந்தினர் உரை: திரு செ. பத்மநாதன் அவர்கள் (திட்டமிடல் பணிப்பாளர். யாழ். செயலகம்)

7.15–8 30 சிறப்பு நிகழ்ச்சி:

**விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும் ஊரெங்கும் போர்ப்பாட்டு கிராமிய இசை நடன நிகழ்ச்சி**

இசை ஆர்வலர்கள் அபிமானிகள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்!

மேற்படி
மன்றத்தினர்

---

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் ஸ்ரீமுக வருஷம் வைகாசி மாதம் 18ஆம் திகதி (31 05 1993) திங்கட்கிழமை பகல் 11 10 மணிமுதல் 12. 55 மணிவரை வரும் கன்னிலக்கினமும், அத்த நக்ஷசத்திரமும், பூர்வபக்ஷச ஏகாதசி திதியும, சித்த யோகமும் கூடிய சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது<br>செல்வப் புதல்வன்<br>**ஜெகதீஸ்வரன்**<br>அவர்கட்கும் | எமது<br>செல்வப் புதல்வி<br>**சுமதி**<br>அவர்கட்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் வீதி அகில இலங்கை இளங் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம சூழ வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த பாலகிருஸ்ணப்பத்தர்
தம்பதிகள்
(இல 86. நல்லூர் குறுக்குவீதி,)
65/1 நாயன்மார் வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்,

செ. முத்துசாமிபத்தர்
தம்பதிகள்
88/2 பருத்தித்துறை வீதி,
குருநாதசுவாமி கோவிலடி.
யாழ்ப்பாணம்.

(4982)

---



## மேஜர் கந்தன்

(நாகேந்திரம் பாலசுந்தரம்)

மன்னார் மாவட்ட ஆயுதப்பொறுப்பாளர்.

தாயின் மடியில் 15-08-1968 — தாயக மண்ணில் 09-06-1992

திதி–29 05-1993

பசுமை மாறாத இளமைக் கனவுகள்
துளிர்விட்டு காயாகி கனியுமுன்னே
காலன் கண்பட்டு வாழ்வைக்கைவிட்டு
மரணத்தை நீ தொட்டணைத்தாய்
உன் நினைவுகள் மட்டுமே எங்கள் நெஞ்சில்
நிறைந்திருப்பதால் இன்னும் எங்கள் கண்களில்
கங்கையின் பிரசவம் கண்ணீராய் பிறக்கவைத்தாய்
இன்னொரு காலையில் இனியொரு வேளையில்—நீ
எம்மிடம் வந்து பிறப்பாய் கந்தா
இந்தக் கனவுகளையே இதயத்தில் சுமந்தபடி
உன் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை
வேண்டி நிற்கின்றோம்

கர்ணன் வீதி, ஆலங்கேணி பூநகரி (4961,4977)
அப்பா, அம்மா. தம்பிமார், தங்கை, உறவினர்கள்.

---

ரவீந்திரன் - மத்தியமுகாம் - அம்பாறை)

**சௌந்தரலிங்கம்/கோகுலவரதன்** (கார்த்திகேசு பாஸ்கரன் - அக்கரைப்பற்று- அம்பாறை)

**கப்டன் சிதம்பரநாதன்/முகுந்தன்** குழந்தைவேல் கோவிந்தராசா - பெண்டுகள்சேனை, கிரான்-மட்டு)

**லெப். பாலச்சந்திரன்** (வேல்முருகு கணேசமூர்த்தி சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை - மட்டு. )

**2-ம் லெப். வனிதன்/புவி** (தங்கையா சுந்தரராஜன் - சின்னப்புல்லுமலை, கரடியனாறு-மட்டு.)

**பாலமோகன்/மோகன்** (இராசதுரை கனகரத்தினம் வாழைச்சேனை - மட்டு. )

**ஜெயகுலன்/கோடீஸ்** (இளையதம்பி மகேந்திரன்- கிரான் - மட்டு. )

**ராகவன்** (மனுவேல் ஜெயராஜ்- கருவேப்பங்கேணி- மட்டு. )

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மறவன்/ரஞ்சித்** (பரமசிங்கம் தவபாலன்- கற்சிலைமடு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**2-ம் லெப். நந்தன்** (கனகலிங்கம் சுதர்சன் -நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். நாயகன்/கபில்** (கதிரமலை கேதீஸ்வரன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி - யாழ். )

**2-ம் லெப். பாணன்/ரவிச்சந்திரன்** நடேசலிங்கம் உதயமோகன் - புளியடி ஒழுங்கை, காங்கேசன்துறை- யாழ். )

வவுனியா மாமடுவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் துரைக்கண்ணா/சரத்** (அந்தோனிப்பிள்ளை சகாயரெக்னோ - வேப்பங்குளம் - வவுனியா)

**சயந்திரன்** (அடைக்கலம் சிவகுமார்- மாத்தளை- மலையகம்)

யாழ் - அராலிப் பகுதியில் வேவு பார்க்கச் சென்ற சமயம் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய-

**தமிழன்** [சிவராசா புவனேந்திரராசா - 1-ம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம் - யாழ். ]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6701)

### சிந்தனைக்கு

அதிகாரத்தை நாடி சுதந்திரத்தைப் பறி கொடுப்பது என்பது விபரீதமான ஆசை.

- பிரான்சிஸ் பேகன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


# ஓய்வு பெற்றோரின் அபத்தமான கோரிக்கை

"இனப்பிரச்சினைக்கு தற்பொழுதுள்ள ஒரே தீர்வு இலங்கை இந்திய ஒப்பந்தமே'' இது சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர், முன்னாள் -ஓய்வுபெற்ற- ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்துள்ள முக்கியமான கூற்றாகும். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இக் கூற்றின் பிரகாரம், இனப்பிரச்சினைக்கு சமாதான உடன்படிக்கையில் குறிப்பிட்ட தீர்வே பொருத்தமானது என்பதாகும். இதன்படி தேவை ஏற்படின் பிரச்சினையைத் தீர்க்க முன்னர் போல், இந்திய இராணுவத்தை அழைக்கலாம் என்ற தொனி உள்ளதையும் எவரும் மறுப்பதற்கில்லை.

ஓய்வு பெற்ற ஜே. ஆரின் கருத்தை ஒத்ததாக அண்மையில் வேறும் சிலர் கருத்துக் கூறியுள்ளனர். ஓய்வு பெற்ற இராணுவத்தளபதி ஒருவர், முன்னாள் அமைச்சர் ஒருவர், ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட குழு ஒன்றே இவ்வாறு தெரிவித்துள்ளது. இக்குழு மீண்டும் இந்திய இராணுவத்தை வரவழைக்குமாறு கடிதம் மூலம் ஜனாதிபதி டி. பி. விஜய ங்காவை கோரியுள்ளது. அதாவது பல துறைகளிலும் இருந்து ஓய்வு பெற்ற சிலர் நிலைமை தமது கையை மீறிவிட்டதாக ஏற்றுக்கொண்டு, அதேவேளை, அந்நிய நாட்டு இராணுவத்தைக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என எண்ணுவதாகத் தெரிகின்றது. இது தமது தோல்வியை அவர்கள் ஏற்றுக் கொள்வதனாலா? அல்லது தம்மால் தீர்க்க முடியாததை இலங்கையிலுள்ள எவராலும் தீர்க்க முடியாது என எண்ணுவதினாலா? என்று திட்டவட்டமாக கூறமுடியாது உள்ளது.

இதேவேளை, இந்திய இராணுவத்தைஅழைக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ள இவ் ஓய்வு பெற்றவர்கள், முன்னர் இந்திய இராணுவம் வந்தபோது இருந்த சூழ்நிலையை விட தற்பொழுது சூழ்நிலை மாறுபட்டதாகவும், உகந்ததாகவும் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

# கொலைக்கள அரசியல் மாற்றப்பட வேண்டும்

– சந்திரிகா

கொலைக்கள அரசியலிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இன மத சௌஜன்யத்திற்கு வழிசெய்யப்பட வேண்டுமென்றும், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான கொள்கைகள் திட்டங்கள் மட்டுமன்றி, அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான சக்தியும் எம்மிடமுண்டு என்றும் அவற்றை நிரூபித்துக் காட்ட இப்போது நாம் தயாராகிவிட்டோம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் மேல் மாகாண சபையின் கட்டுப்பாட்டிற்குள் வரும் பிரதேசத்தில், போக்குவரத்து, கல்வி, சுகாதார சேவைகள் மட்டுமன்றி பொது வசதிகளையும் அபிவிருத்தி செய்ய நாம் திட்டமிட்டிருக்கிறோம் எனவும் நேற்று மாகாணசபை அமைச்சர்கள் பதவியேற்பு வைபவத்தின் பின்னர் முதலமைச்சர் சந்திரிகா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தளபாடப் பற்றாக்குறை

இடம் பெயர்ந்து இதுவரை யாழ் யூனிவேர்சல் கல்விநிலையத்தில இயங்கி வந்த புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தற்போது வண். மேற்கு முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலையில் இயங்கி வருகின்றது. இவ் வித்தியாலயத்தில் பெரும் தளபாடபற்றாக்குறை நிலவுவதாகவும், பெரும்பாலான மாணவர்கள் நிலத்தில் இருந்து கல்வி கற்பதாகவும் வித்தியாலய அதிபரின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.




### மாகாணசபை - மத்திய அரசு

# அதிகாரங்கள் தொடர்பாக தெளிவானவரையறை உண்டு

## ராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் இடையே உள்ள அதிகாரங்கள் தொடர்பாக இலங்கையின் அரசியல் அமைப்பில் மிகவும் தெளிவான வரையறை செய்யப்பட்டுள்ளது என்று மாகாணசபைக்கான இராஜாங்க அமைச்சர் ஜோண் அமரதுங்கா பி. பி. சியின் சந்தேசியவிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இது தவிர நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மாகாணசபை அமைச்சும், உயர்நீதி மன்றமும் தயாராகஇருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தலைநகர் அமைந்திருக்கும் மேல் மாகாண சபையின்ஆட்சி எதிர்க்கட்சிகளிடம் வந்திருப்பதை தொடர்ந்து நடைமுறைச் சிக்கல்கள் ஏதும் ஏற்படுமா என்பது பற்றி அமைச்சரிடம் வினாவப்பட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை சகல திணைக்களங்களுக்கும் மாகாணசபையின் கட்டுப்பாடு தொடர்பாக சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக தெரியவந்திருப்பதாகவும் பி. பி. சி மேலும் கூறியது.

# யாழ். மாவட்டத்தில் 12 தொழுநோயாளர்

[யாழ்ப்பாணம்]

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் யாழ். மாவட்டத்தில் 12 பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இது ஏப்ரல், மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்மூலமே தெரிய வந்துள்ளது. ஏப்பிரல் மாதம் 7பேருக்கும், மே மாதம் 5 பேருக்குமாக 12 பேருக்கு இந்நோய் இருப்பது இனம்காணப்பட்டுள்ளதாகவும். சுவாசம் சம்பந்தமான நோய்கள்மூலமே இது உருவாகின்றதெனவும், இந்நோய் சம்பந்தமான அறிவுரைகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். [சி], [நி]

# முன்னாள் அமைச்சர் மீது கொலை மிரட்டல் முறையீடு

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் அமைச்சர் ஒருவர் தம்மைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியதாக சப்ரகமுவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியரும் நிர்வாகத்தினரும் அமைச்சரின் பெயரை இழுக்க வேண்டாம் என்று தொழிலாளரும் நிர்வாகத்தினரும் எச்சரிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது

ஜனாதிபதிபிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட 200 ஆடைத்தொழிற்

# மன்னார் ஆயர் கொழும்பில் உயரதிகாரிகளுடன் பேச்சு

[கொழும்பு]

யாழ் குடா மற்றும் மன்னார் தீவகப் பகுதிகளுக்கான உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தைச் சீராக்குவது தொடர்பான பேச்சுவார்த்தையில் மன்னார் ஆயர் ஈடுபட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் சீரற்ற போக்குவரத்து போன்ற விடயங்கள் குறித்தே மன்னார் யாழ். மாவட்டத்தில் ஆயர் கொழும்பில் அரசாங்க உயர் அதிகாரிகளையும் சர்வதேச மனித நேய நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறார்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் ஆயர், மக்கள் சுதந்திரமாகப் போக்குவரத்தை மேற்கொள்ள அச்சுறுத்தல் அற்ற ஒரு பாதை தேவை என்பதையும் தனது பேச்சின்போது வலியுறுத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# போசாக்கின்மையால் 49.6 விகிதம் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் எடுத்த புள்ளி விபரங்களின்படி போசாக்குக் குறைவினால் 49.6 வீதத்தினர் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு எடுத்துள்ள கணிப்பீட்டில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் அவ்வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் இந்த 49.6 வீதத்தில் முதலாவது போசாக்கு குறைந்த மட்டதில் 28.9 விகிதத்தினரும், இரண்டாம் போசாக்கு குறைந்த மட்டத்தில் 15.8 ளது.

இவ்வாறு போசாக்குக் குறைவினால் பலவிதமான நோய்களின் தாக்குதலுக்கு இலக்காவதாகவும் அகதிகள் முகாம்களில் உள்ள குழந்தைகளில் இவ்வாறான தாக்கம் அதிக அளவு காணப்படுவதாகவும் தெரியவருகிது.

## சுகாதார எழுச்சிவாரம்

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆனி 7ஆம் திகதி தொடக்கம் 13-ம் திகதி வரை சுகாதார எழுச்சி வாரம் ஒன்றை செயற்படுத்த

றுக் கொள்வதனாலா? அல்லது தம்மால் தீர்க்க முடியாதவை இலங்கையிலுள்ள எவராலும் தீர்க்க முடியாது என எண்ணுவதினாலா? என்று திட்டவட்டமாக கூறமுடியாது உள்ளது.

இதேவேளை, இந்திய இராணுவத்தைஅழைக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ள இவ் ஓய்வு பெற்றவர்கள், முன்னர் இந்திய இராணுவம் வந்தபோது இருந்த சூழ்நிலையை விட தற்பொழுது சூழ்நிலை மாறுபட்டதாகவும், உகந்ததாகவும் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

அதாவது, சிறிலங்கா தன்னாட்சி பொருந்திய இறைமையுள்ள ஒரு நாடு என்பதை பறைசாற்றும் இவர்கள் உள்நாட்டு அரசியல் பிரச்சினைத் தீர்விற்கு வெளிநாட்டுப் படையொன்றை நாடி நிற்பதென்பது வேடிக்கையானதும், அவமானகரமானதுமாகும் இதேவேளை இவர்களே இலங்கையின் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறுவது முரண்பாடானதுமாகும்.

இதேவேளை தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தன்னால் இராணுவத் தீர்வு ஒன்றை எட்ட முடியும் என்ற முடிவுடன் இந்திய இராணுவம் இலங்கைக்குள் மீண்டும் வருமேயாயின் இலங்கையில் ஏற்பட்ட கடந்த கால அனுபவத்திலிருந்தும், இந்தியாவில் இன்று கிடைக்கும் தற்போதைய அனுபவங்களில் இருந்தும் இந்தியா எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதே பொருளாகும்.

1987 இல் இந்திய இராணுவம் இலங்கை வந்தபோது தமிழரின் தேசிய இன விடுதலை போராட்டத்தைத் தோற்கடிக்க தன்னாலான முழு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இம்முயற்சி இரண்டரை வருடங்களுக்கு மேல் நீடித்தும், அதனால் வெற்றி பெற முடியவில்லை. தோல்வியுடன் திரும்ப வேண்டி இருந்தது: இதேபோன்றே இன்று காஷ்மீரில் பல லட்சம் துருப்புக்களைப் பயன்படுத்தியும், பாதுகாப்புச் செலவீனத்தில் 15 வீதத்தைச் செலவீடு செய்தும் இராணுவத் தீர்வில் வெற்றியைப் பெறமுடியவில்லை. இதேவேளை, உள்நாட்டு போரில் ஈடுபடுவதினால் இந்திய இராணுவம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாவதாகவும் விமர்சிக்கப் படுகின்றது.

இந்நிலையில் கடந்த / நிகழ்கால அனுபவங்களைப் புறந்தள்ளி ஆக்கிரமிப்பு அபிலாசையில், தனது நாட்டிற்கு வெளியிலுள்ள ஒரு தேசிய இனத்தின் தாயகத்தில் இந்திய இராணுவம் கால் வைக்குமானால், அது மீண்டும் ஒருமுறை இலங்கை விவகாரத்தில் விட்ட பெரும் தவறாகவே அமையும். அது ஒருபோதும் வெற்றியைத் தேடித் தரப் போவதில்லை.

---

12 பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இது ஏப்ரல், மே மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்மூலமே தெரிய வந்துள்ளது. ஏப்பிரல் மாதம் 7பேருக்கும், மே மாதம் 5 பேருக்குமாக 12 பேருக்கு இந்நோய் இருப்பது இனம்காணப் பட்டுள்ளதாகவும். சுவாசம் சம்பந்தமான நோய்கள்மூலமே

## கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விஞ்ஞானபீடம் நடத்தும் உயர் வகுப்பு மாணவருக்கான கண்காட்சி இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 27ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சியை இதுவரை 9,500 க்கும் அதிகமானோர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

காரி தெரிவித்தார். [சி], [நி]

## முன்னாள் அமைச்சர் மீது கொலை மிரட்டல் முறையீடு

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாண சபை முன்னாள் அமைச்சர் ஒருவர் தம்மைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியதாக சப்ரகமுவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியரும் நிர்வாகத்தினரும் பொலிஸ்சில் முறைப்பாடு செய்துள்ளளர்.

முன்னாள் மாகாண சபை அமைச்சர் ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்றுடன் ஆடைத் தொழிற்சாலைக்குள் நுழைந்து தொழிலாளரைக் கொல்லப் போவதாக மிரட்டியதாகச் செய்துள்ள முறைப்பாட்டை அடுத்து பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் பொலிஸ் விசாரணையின் பொழுது முன்னாள் அமைச்சரின் பெயரை இழுக்க வேண்டாம் என்று தொழிலாளரும் நிர்வாகத்தினரும் எச்சரிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது

ஜனாதிபதிபிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட 200 ஆடைத் தொழிற்சாலைகளில் சம்பந்தப்பட்ட மேற்படி தொழிற்சாலையும் ஒன்றாகும்.

கூறியது.

### இடமாற்றம்

(கொழும்பு)

யாழ்/ தொலைக்கல்வி நிலையப் பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட போதனாசிரியருமான எம். எஸ். அலக்ஸ்சாண்டர் இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் அளுத்கம முஸ்லிம் மகளிர் ஆசிரியர் கலாசால சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு எடுத்துள்ள கணிப்பீட்டில் இருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் அவ்வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் இந்த 49.6 வீதத்தில் முதலாவது போசாக்கு குறைந்த மட்டத்தில் 28.9 விகிதத்தினரும், இரண்டாம் போசாக்கு குறைந்த மட்டத்தில் 15.8 விகிதத்தினரும், மூன்றாவது போசாக்கு மட்டத்தில் 4.9 விகிதத்தினரும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்

முகாம்களில் உள்ள குழந்தைகளில் இவ்வாறான தாக்கம் அதிக அளவு காணப்படுவதாகவும் தெரியவருகிது.

### சுகாதார எழுச்சிவாரம்

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆனி 7ஆம் திகதி தொடக்கம் 13-ம் திகதி வரை சுகாதார எழுச்சி வாரம் ஒன்றை செயற்படுத்த யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என தெரிவிக்கப் படுகிறது.

## இரண்டு மாதகாலத்தில் 79 பேருக்குக் காசநோய்

[யாழ்ப்பாணம்]

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட காசநோய் ஆய்வொன்றின் மூலம் யாழ். மாவட்டத்தில் 79 பேருக்கு இந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் சுகாதார நிலையத்திற்குட்பட்ட பகுதியில் இந்நோயின் தாக்கத்திற்கு 24 பேர் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் ஆய்வில் இருந்து தெரிய வந்துள்ளது.

---

## விடுதலைப் புலிகளை ஒடுக்க ஜெயலலிதா தீவிரம்

### ஒரிஸா முதல்வர் தொவிப்பு

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் ஜெயலலிதா சிறப்பாக பணியாற்றுவதாக ஜனதாதள தலைவரும் ஒரிஸா மாநில முதலமைச்சருமான விஜுபட்நாயக் கூறியுள்ளார். நேற்று இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர் சென்னை வந்தார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்க ஜெயலலிதா அரசு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என மத்திய அரசு கூறுவது நியாயமற்றது. மாநிலத்தில் புலிகளை ஒடுக்க போதுமான பணமோ, ஆயுதமோ மத்திய அரசு வழங்காத நிலையில் இப்படி குற்றஞ்சாட்டக் கூடாது என்று பட்நாயக் கூறினார்.

முன்னர் எம்.ஜி.ஆர் அரசு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்தது இதற்கு மத்திய அரசும் உதவியாக இருந்து எனக் குறிப்பிட்ட ஒரிஸா முதலமைச்சர் பட்நாயக் புதிய ஆளுநர் சென்னா ரெட்டியும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் இணைந்து செயற்படுவர் என நம்பிக்கை தெரிவித்தார்.

## சார்ள்ஸ் நவாஸ் குறித்து முரண்பாடான தகவல்கள்

### கருணாநிதி குற்றச்சாட்டு

சைதாப்பேட்டை சிறையிலிருந்து தப்பிய சார்ள்ஸ் நவாஸ் குறித்து ஜெயலலிதாவும் சென்னை பொலிஸ் கமிஷனரும் முரண்பாடான கருத்துகளை தெரிவித்துள்ளதாக மு. கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நவாஸ் விடுதலைப்புலி உறுப்பினர் அல்ல எனஜெயலலிதா கூறுகிறார் அதேசமயம் பொலிஸ் கமிஷனர் நவாஸ் விடுதலைப்புலி என்று கூறுகிறார் இதில் எது உண்மை என கருணாநிதிகேட்டுள்ளார்

### அன்னைக்கு பட்டம்

ஏழை மக்களுக்கு சேவையாற்றியமைக்காக அன்னை திரேசா அவர்களுக்கு வார்ஸாவிலுள்ள ஜக்னிலோவா பல்கலைக்கழகம் கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

---

# ஐரோப்பிய சமூகத்திற்கு எதிராக பொருளாதார தடை

## அமெரிக்கா விதித்தது

(வாஷிங்டன்)

தொலை தொடர்பு சாதனங்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் அரசாங்க காண்ட்ராக்ட் தொடர்பான சர்ச்சையில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை நேற்று முதல் விதித்துள்ளது.

வாஷிங்டனில் இதனை அறிவித்த பில் கிளிங்டன் நிர்வாகம் பெடரல்காண்ட்ராக்ட்களைப் பெறுவதற்கு ஐரோப்பிய நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதனால் அமெரிக்காவில் ஐரோப்பிய பொருளாதார நாடுகளின் வர்த்தகம் வருடாந்தம் சுமார் இரண்டு கோடி டாலர் அளவுக்கு பாதிக்கப்படும் எனவும் மதிப்பிடப்படுகிறது.

இதேவேளை அமெரிக்காவின் இந்த அறிவிப்பு தொடர்பாக ஐரோப்பாவில் பெரும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த நடவடிக்கை எவ்வித ஆதாரமும் அற்றது என்றும் கூறப்பட்டுள்ளது எவ்வாறு இதனைச் சமாளிப்பது என்பது குறித்து மற்றஐரோப்பிய நாடுகளுடன் கலந்தாலோசனை செய்யப்பட இருப்பதாகவும், இப்பிரச்சினையால் உலக வாணிபப் பேச்சுக்கள் மேலும் தாமதமாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கம்போடிய தேர்தலில் கமறூச் பங்கேற்பு

கம்போடியாவில் முதல் முறையாக நடைபெற்றுவரும் பொதுத் தேர்தலில் கமறூச் இயக்கமும் வாக்களிக்க தனது உறுப்பினர்களை அனுமதித்துள்ளது. இத்தேர்தலைக் குழப்பப் போவதாக முன்னர் கமறூச் அறிவித்திருந்தது தெரிந்ததே.

வாக்களிப்பில் கெரில்லாக்கள் கலந்து கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், அவர்கள் வரவேற்கப்பட்டதாகவும் ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர். சுமார் 200 கமறூச் வீரர்கள் ஆயுதம் ஏதுமின்றி வாக்காளர் அட்டையுடன் ஒருபகுதியில் வாக்களிக்க வந்ததாக ஐ. நா. அதிகாரி தெரிவித்தார். இதேசமயம் தேர்தலில் முதலிரு நாட்களிலும் மொத்த வாக்காளர்களில் 70 சதவீதமானோர் (30 லட்சம்) வாக்களித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

தேர்தல் குறித்துக் கருத்து வெளியிட்ட கமறூச் இயக்கம் தமது தந்திரோபாயங்களை மாற்றி விட்டதாகவும் தற்போது தமக்குச் சார்பான கட்சி வெற்றியடைய இயக்கம் பாடுபடுவதாகவும் தெரிவித்தது.

ஈழநாதம்

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



**மேஜர் எழிலமுதன் (சுதன்)**

(நமசிவாயம் உமாசுதன்)

வீரப்பிறப்பு: 21-06-1970 வீரச்சாவு: 30-05-1992

ஆண்டொன்று மறைந்தும் ஆறாத்துயருடன் வாடும் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் முதலானோர் தமது இதயபாரத்தை உமது பாதக்கமலங்களில் அர்ப்பணிக்கும் கண்ணீர்ப் பூக்கள்.

தாயகப்போரில் தானையை நடாத்தி காவிய நாயகனானாய்
நீ ஏவியகணைகளில் எத்தனை எத்தர்கள் எமனுலகெய்தினர்
ஆயிரமாயிரம் உயிர்த்தோழர் ஆர்ப்பரித்தெழுந்திட்டபோது
நீ மறைந்திடுதல் நியாயமோ சொல்லாய்?

தூயவனே நாம் துயரற்றிருந்தோம்
துணிந்தெமைக் காத்திட வருவாய் என்று – நீயோ
மாயவன்போல மாயமாய் மறைந்தாய்
மன்னனே எம் எழில் அமுதா!

### மெய்வல்லுநர் போட்டி

யாழ். புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தினதும், யாழ். செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தினதும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் செட்டித்தெரு மெ. மி. வி. மைதானத்தில் நடைபெறும்.

### கலந்துரையாடல்

நவீன இலக்கியம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் சொக்கன், சுரேஸ் கனகராசா, சாந்தன், தணிகாசலம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

### பொதுவ

யும் என்று எதிர்பார்க்கப்படும் குமாரி என்ற கப்பலில் தபால் பொதிகளை ஏற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் நேற்று மாலைவரை மேற்கொள்ளப்படவில்லை என்று கொழும்பில் இருந்து கிடைத்த மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.


**BECON**

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

G.A.Q. 94
B.A. 94

பேராதனைப் பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

பொருளியல்
S. வரதராஜன்
B.A. (Hons.)

ஆரம்பம்


## ஆயுதம் வைத்திருக்க ஈ. பி. டி. பி. கோருகிறது

தமது செயற்பாட்டுக்கு ஆயுதம் அவசியமானது எனவும், தாங்கள் கொழும்பிலிருந்து செயற்பட்டாலும் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கையிலேயே ஈடுபடுவதாகவும் எனவே தமது அங்கத்தவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது தவிர்க்க முடியாதது எனவும் ஈ. பி. டி. பி. குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு உதவியது போலவே தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவிற்கும் உதவப்போவதாகத் தெரிவித்த அவர், இந்நோக்கத்திற்காக எவ்வாறாயினும் தமது கொழும்பு காரியாலயத்தை விரைவில் மீண்டும் திறக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; எதிர்க்கட்சிகள் தமது செயற்பாட்டில் கொண்ட சந்தேகம் காரணமாகவே கொழும்பிலிருந்து வெளியேறி திருக்கோணமலை செல்லவேண்டி ஏற்பட்டதென்றும் இந்த சந்தேகத்திற்கு தமது அங்கத்தவர்கள் ஆயுதத்துடன் திரிந்ததே காரணம் எனவும் தெரிவித்தார்.

மேலும் மாகாணசபைத் தேர்தலும், லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதும் எதிர்க்கட்சிகளுக்கு தம்மீது சந்தேகத்தை ஏற்படுத்தியதாகவும்.

தாம் புலிகளை ஒடுக்கவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதை எதிர்க்கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

### கால எல்லை

சையின் வெட்டுப்புள்ளி வெளியாகும் வரைக்கும் மற்படி பரீட்சைக்குத்தோற்றியமாணவர்களுக்காக இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டிருக்கிறது [க]

### சர். செஞ்சிலுவை

கட்ட நடவடிக்கையாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்படி விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரியான எலிசபெத் ருவின்ச் என்பவர் இன்றுயாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் வந்து காணாமல் போனவர்களது உறவினர்களின் முறைப்பாடுகளை ஆராய்வதுடன் வடபகுதியின் சிறிலங்கா படைத்தளங்களுக்குச் சென்று படை அதிகாரிகளுடன் மேற்படி விடயங்கள குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவார்.

இவர் ஏறகனவே ஏனைய பகுதிகளுககுச்சென்று காணாமல போனவர்கள், கைதுசெய்யப்பட்டவர்கள் குறித்து நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### குண்டு

கொல்லப்பட்டது தெரிந்ததே.

மேற்படி குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று மேற்கொண்டுவருகிறது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி விசாரணை ஆரம்பமானபோதே றொட்றிக்கோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் சாட்சியமளிக்கையில்–

குண்டுவெடிப்பு நடைபெற்ற இரண்டரை மணிநேரத்திற்குள் தானும் தனது அதிகாரிகளும் சமபவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று ஆராய்ந்தபோது அப்பகுதியில் சிறுதுண்டுகளைக்கூட கண்டுபிடிக்க முடியாதுபோய்விட்டது.

நாம் அப்பகுதியில் பலமணிநேரமாகத் தேடுதல் நடாத்திய போதிலும் குண்டுவெடிப்பிற்கான எந்த ஒரு தடயங்களும் கிடைக்கவில்லை. வாகனத்தின் சிதறல்களைக்கூட அங்கு காணமுடியவில்லை என்றார்.


இவரது சாட்சியத்தை லலி கொப்பேகடுவவின் சட்டத்தரணி நெறிப்படுத்தினார்.

## 51-வது நாள் நினைவு தினமும்

அந்தியேட்டியும், வீட்டுக்கிருத்தியமும்

**29-5-93**

வீரப்பிறப்பு: வீரச்சாவு:



வலி கிழக்கு வட பகுதி பல நோ. கூ. சங்கம்

## விசேட அறிவித்தல்

எமது சங்க எல்லைப்பரப்பிலிருந்து இடம் பெயர்ந்து வேறு சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் இலவச நிவாரணம் பெறுபவர்கள் தங்களது உலர் உணவு அட்டை/உலர் உணவு முத்திரை/ உணவு பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் நேரடியாக எமது சங்க தலைமைப் பணிமனைக்கு (ஆவரங்கால், புத்தூர்) சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூ. சங்கம்,
அச்சுவேலி.
(சி-6707)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**செல்லத்துரை சிவகுரு**

தோற்றம்: 27-07-1936 மறைவு: 29-04-1993

எம் வாழ்வு பிரகாசிக்க
சுடராய் ஒளிர்ந்த-எம் தெய்வம்
அமரஜோதியாகி
முற்றாய் முடிந்தன முப்பது நாட்கள்
எத்தனை நாட்கள் நகரினும்-எம்
தெய்வத்தின் நினைவுகள்
நீங்கா எமை விட்டு.

4, கோணாவளை ஒழுங்கை
பொற்பதி வீதி,
கொக்குவில்.

(4992)

நீங்கா நினைவுடன்
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

மாயவன்போல மாயமாய் மறைந்தாய்
மன்னனே எம் எழில் அமுதா!

தும்பிகள் சகிதம் சிங்களக்கூலிகள்
வம்புக்கு வந்திட்டபோதும் அவர்
ஓங்கிய கைகள் ஒடிந்திடத் துரத்தி
ஒட்ட நறுக்குவோம் வாலை
வேங்கைகள் முன்னே வீம்புக்கு வந்தால்
வேருடன் வெட்டியே சாய்ப்போம்
தாயினும் இனிய தமிழீழம் ஒருநாள்
தாரணி போற்றிட அமைப்போம்.

குறிப்பு:- நாளை 30-05-93 ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கும் மதிய உணவு உபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு சகல போராளிகளையும், உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

கூழாவடி, ஆனைக்கோட்டை. (சி/6710) -பெற்றோர்.

---


ஆரம்பம்

B.A 29.5.93

சனி. 1.00 p.m.

G.A.Q.

1-6-93

செவ். 6.30 a.m.

(சி/6694)


---


தமிழில்! தமிழில்! தமிழில்!

# நியூஸ்வீக்

மார்ச், 8-1993

மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு
அசல் ஆங்கில அமைப்புடன்

பன்னாட்டுச் செய்திகளை
இந்நாட்டு மக்களுக்கு
தொகுத்தளிக்கிறது

வாங்கிப் படியுங்கள்
பயனடையுங்கள்
எங்கும் கிடைக்கும்

(சி/6709)

நியூஸ்வீக் - நியூஸ்வீக் - நியூஸ்வீக்


---

01 ★ 04 ★ 1972



09 ★ 04 ★ 1993

## லெப். திருவள்ளுவர் / குணபால்

(சரவணமுத்து ஜெயக்குமார்)

அடிமை நிலை நீக்குதற்கு ஆனமட்டும்
அளப்பரிய சேவையினைச் செய்தாய்
நண்பர் கூட்டத்தினை நீ நோக்கி
தமிழ் மக்கள் துயரங்களை எடுத்துச் சொன்னாய்
கொடிய பல சட்டங்கள் நீக்கச் செய்து
தமிழீழத்தில் சுதந்திரமாய் வாழ்வதற்கு
முடியுமட்டும் போரினை யாற்றி வந்தாய்
மாவீரனே! உன்புகழ் வாழி! வாழி!

உன் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரங்கள்,
மைத்துனர்கள், மற்றும்
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.
தற்போதய விலாசம்:
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(4994)

---

## மரண அறிவித்தல்

## திருமதி வரதராஜன் ஜமுனா

தாவடி வடக்கு காளிகோவிலடியைச் சேர்ந்த திருமதி வரதராஜன் ஜமுனா இத்தாலியில் அகால மரணமானார். அன்னார் சு. நவரெத்தினம் சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகளும், முரளிதரன் (கனடா), கங்கா (லண்டன்), காவேரி ஆகியோரின் அன்பு சகோதரியும், திரு. இராசையா (இளைப்பாறிய தபால் அதிபர், நீர்வேலி) அவர்களின் அருமை மருமகளும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
சு. கனகராசா

[4993]

---

# 5-ம் ஆண்டு வீர அஞ்சலி

வீரப்பிறப்பு: 02-07-1969

வீரச்சாவு: 29-05-1988

## கப்டன் சீலன்

முருகன் ஜெயச்சந்திரன் [ஜெகன்]

இவர் பல இடங்களில் இலங்கை, இந்திய இராணுவங்களோடு பெரும் தாக்குதல்களில் ஈடுபட்டவர். இறுதியாக வடமராட்சி உடுப்பிட்டி என்னும் இடத்தில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்கு எமது வீர அஞ்சலித் துளிகள் உரித்தாகட்டும்.

குடும்பத்தின் பாரங்கள் கூடிட்ட போதும் நீங்கள்
நாட்டினைக் காத்திட கூடிநடந்தவர்
பற்றைகள் புற்றுகள் நடுவினில் படுத்தீர்கள்
பாசத்தின் வேதனை மனதினில் சுமந்தவர் நீங்கள்
பண்பான நாட்டினை கட்டியெழுப்பமுன் நீங்கள்
பாழ்பட்ட தீயினில் கருகிப் போய்விட்டீர்கள்
பார்த்திட்ட எம்மனம் கருகிட்ட போதிலும்
முனைப்புடன் அவைகள் முளைவிடுகின்றன
உங்கள் சமாதியில் உள்ளத்தைக் காட்டி நாம்
உண்மையாய் சபதம் ஒன்றினை எடுக்கிறோம்
எத்தனை இன்னல்கள் வந்திட்ட போதிலும் நாம்
நாடென்ற வீட்டினை கட்டியெழுப்புவோம்
நீங்கள் செய்த கடமைகள் தொடர்ந்து நாங்கள்
செய்வோம்
கனவினில் கூட நாம் குனிந்து நடந்திடோம்
அண்ணனின் வழியில் நீங்கள் அன்று நடந்தீர்கள்
இன்று உங்களின் வழியினில் நடக்கிறோம் அண்ணா
இவரின் ஆத்மா சாந்தியடைய தமிழீழத்தை
பிரார்த்திக்கிறோம்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு.

-குடும்பத்தினர்

---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ஆம் ஆண்டு மே மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.